**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 391**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பத்தாவது பாராளுமன்றம்
( முதலாவது கூட்டத்தொடர்)

# அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் ஐந்தாவது அறிக்கை

(2025.05.08 மற்றும் 2025.07.17ஆந் திகதிகளில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணை )

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ( டாக்டர்) நிஷாந்த சமரவீர அவர்களினால்
2025 திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.

2025 திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிடப்பட வேண்டுமென இலங்கை பாராளுமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்**
**அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண்**

1. கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா.உ.(தவிசாளர்)
2. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ., *(2025.05.08 ஆம் திகதி முதல்)*
3. கௌரவ மனோ கணேஷன், பா.உ. *(2025.03.21 ஆம் திகதி முதல் )*
4. கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேகர, பா.உ. *(2025.05.20 ஆம் திகதி முதல்)*
5. கௌரவ ( சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்க, பா.உ. *(2025.03.21 ஆம் திகதி முதல் )*
6. கௌரவ டி.வீ.சானக்க, பா.உ. *( 2025.03.21 ஆம் திகதி முதல்)*
7. கௌரவ (சட்டத்தரணிய) அநுராத ஜயரத்ன, பா.உ. *(2025.03.21 ஆம் திகதி முதல்)*
8. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ., *( 2025.03.21 ஆம் திகதி முதல்)*
9. கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ. *( 2025.03.21 ஆம் திகதி முதல்)*
10. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ. , *( 2025.05.20 ஆம் திகதி முதல்)*
11. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ. *(2025.03.21 ஆம் திகதி முதல்)*
12. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ., *(2025.05.08 ஆம் திகதி முதல்)*
13. கௌரவ எம்.கே.எம்.அஸ்லம், பா.உ.,
14. கௌரவ ( சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி,பா.உ., *( 2025.03.21 ஆம் திகதி முதல்)*
15. கௌரவ சமன்மலி குணசிங்க, பா.உ. ,
16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ., *(2025.03.21 ஆம் திகதி முதல்)*
17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ., *( 2025.05.08 ஆம் திகதி முதல்)*
18. கௌரவ சுஜீவ திசாநாயக்க, பா.உ.,
19. கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.,
20. கௌரவ (டாக்டர்) எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா, பா.உ.,
21. லெப்டினன் கமாண்டர் (ஓய்வு) பிரகீத் மதுரங்க, பா.உ., *(2025.03.21 ஆம் திகதி முதல்)*
22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.,
23. கௌரவ ருவன் மாபலகே, பா.உ.,
24. கௌரவ சுனில் ராஷபக்ஷ, பா.உ.,
25. கௌரவ தர்மபிறிய விஜேசிங்க, பா.உ.,
26. கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ.,
27. கௌரவ ( டாக்டர்) பத்மநாதன் சத்யலிங்கம், பா.உ., *( 2025.03.21 ஆம் திகதி முதல்)*
28. கௌரவ திலின சமரகோன், பா.உ.,
29. கௌரவ சந்திம ஹெட்டியாரச்சி, பா.உ.,
30. கௌரவ ( சட்டத்தரணி) செல்வி லக்மாலி ஹேமசந்திர, பா.உ,
31. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா.உ., *(2025.03.21 ஆம் திகதி முதல்)*

## குழு செயலகத்தின் பணியாட்குழுவினர்

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாட்குழுவினர் பின்வருமாறாகும்.

- ❖ உதவிப் பணிப்பாளர் ( நிருவாகம்) – செல்வி ஹிமாலி சமரதிவாகர
- ❖ தலைமை உத்தியோகத்தர் – திருமதி. எச்.ரூபானி த சொய்சா
- ❖ பிரதி தலைமை உத்தியோகத்தர் – திரு.எஸ்.எல்.விக்ரம
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர் – திருமதி.ஜி.வி.எஸ்.கே.குமாரி
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர் – திருமதி.ஐ.எஸ்.கோமஸ்
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர் – திருமதி.ஜி.எல்.டி.பெர்னாந்து

**குழு அறிக்கைகள்**

www.parliament.lk எனும் இணையத்தின் ஊடாக பின்வரும் வழிமுறையைப் பின்பற்றி அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற நடவடிக்கைகள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

**உள்ளடக்கம்**


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | தவிசாளரின் குறிப்பு | v |
| 2. | நிறைவேற்று பொழிப்பு | vii |
| 3. | நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் | 01 |
| 4. | அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் விசாரணை செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்<br>- காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 02-24 |

## <u>தவிசாளரின் குறிப்பு</u>

இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவானது பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின்போது 2025.05.08 மற்றும் 2025.07.17ஆகிய இரு திகதிகளில் விசாரணைக்கு உட்படுத்திய, **கமத்தொழில், கால்நடைகள் வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் காணப்படும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின்** 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு தலைமயதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணை அறிக்கையினை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148வது உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தின் நிதி நிருவாகத்துடன் நேரடியாக தொடர்புபடும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விசாரணைகள் மூலம், நாட்டின் பொது தொழில்முயற்சிகளின் நிதி மற்றும் ஏனைய சொத்துக்களின் முகாமைத்துவம் முக்கியமானதொரு விடயம் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் (LRC) நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்களான, சமத்துவமற்ற காணிப் பகிர்வினை சீர்படுத்துதல், விவசாயிகளுக்கு நில உரிமையை வழங்குதல் மற்றும் அரச காணிகளை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தி தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் போன்ற விடயங்கள் இந்த நிறுவனங்களினால் எவ்வளவு தூரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறித்து குழு ஆராய்ந்ததுடன், இதன்போது அடையாளம் காணப்பட்டுள்ள சட்டத்தின் நோக்கங்களுக்கு மாறாக ஆணைக்குழு செயற்படுவது தொடர்பில் எழும் பிரச்சினைகளை தீர்த்து, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் நிருவாக நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கும், சட்டத்துக்கு ஏற்ப காணி தொடர்பிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கும் குழுவானது பல விதப்புரைகளை முன்வைத்துள்ளது.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்படும் விதப்புரைகள் மீது அதற்குப் பொறுப்புக் கூறும் சகல தரப்பினரதும் கவனம் செலுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே, இக்குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் பெறுபேறாக சிறந்த சேவையினை நாடு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன்போது நாட்டின் இறைமை உரித்தாகவுள்ள பொதுமக்களினதும் அவர்களது பிரதிநிதிகள் என்ற ரீதியில் இந்த உயரிய சபையினதும் கவனத்தை இங்கு முன்வைக்கப்படும் விதப்புரைகள் மீது ஈர்ப்பதானது இந்த முயற்சிகளை பயனுறுதிமிக்கதாக அமைத்துக்கொள்ள வழிகோலும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விடயப்பணிகளை மிகவும் சிறப்பாக மேற்கொள்ளும் முகமாக, இக்குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு, கௌரவ சபாநாயகர் தலைமையிலான பாராளுமன்ற பணியாட் குழுவினர் மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஆலோசகரிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு, திறைசேரி உத்தியோகத்தர்கள் மற்றும் பதில் கடமையாற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளிட்ட தேசிய கணக்காய்வு நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பினையும் பாராட்டுகின்றேன்.

**டாக்டர் நிஷாந்த சமரவீர**
தவிசாளர்
அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

## நிறைவேற்று பொழிப்பு

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தொடர்பில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் (COPE) 2025 மே 8 மற்றும் 2025 யூலை 17 ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் ஆணைக்குழுவின் தற்போதைய வினைத்திறன் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது நிறுவனத்தின் செயற்பாடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவத்திலான பாராதூரமான பல முறைகேடுகள் வெளியாயின. இப்பிரச்சினைகள் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதில் தடையாகக் காணப்படுவதுடன், சட்டரீதியாகவும் நிதிரீதியாகவும் கருத்தில் கொள்ளத்தக்க அபாய நிலைமைளைத் தோற்றுவித்துள்ளது.

ஆணைக்குழுவின் மனித வள முகாமைத்துவமானது பாரதூரமான முறைசாரா நிலைமையில் காணப்படுகின்றமை குழுவின் முக்கிய கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. 2018ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையினைவிட அதிகமாக இருப்பதையும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனமானது அமைச்சின் செயலாளரது எழுத்துமூல அறிவுறுத்தல்களை கருத்தில் கொள்ளாது, இரத்துச் செய்யப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக நியமனம் வழங்கப்பட்டுள்ளமையால், இந்த நியமனம் செல்லுபடியானதொரு நியமனம் இல்லையென்பது வெளியானது.

ஆணைக்குழுவின் நிதி முகாமைத்துவமும் பாரிய சிக்கலில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இதற்கான உதாரணமாக, **சேதனப் பசளை திட்டத்தை** சுட்டிக் காட்ட முடியும். இத்திட்டத்துக்காக ரூ.302 மில்லியனுக்கு அதிகமான நிதித்தொகை செலவு செய்யப்பட்டுள்ளபோதிலும், இதிலிருந்து ரூ.22 மில்லியன் மாத்திரமே வருமானமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சட்டத்துக்கு ஏற்ப, இத்தகைய கருத்திட்டங்களில் நிதியை ஈடுபடுத்துவதற்கான சட்டரீதியான தத்துவம் காணப்படாதபோதிலும், உத்தியோகத்தர்களின் ஆலோசனையினைக் கருத்தில் கொள்ளாது இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், எந்தவொரு சாத்தியக்கூற்று ஆய்வும் மேற்கொள்ளப்படாது, இத்திட்டத்துக்கான கட்டிடங்கள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தல்லாத காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையும் பாராதூரமானதொரு பிரச்சினையாகும். இது அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கு முரணானதொரு செயற்பாடு என்பதுடன், இந்த முரண்பாடுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர்

தொடர்பில் முழுமையான விசாரணையை முன்னெடுத்து, அறிக்கையொன்றை முன்வைக்குமாறு ஆணைக்குழு விதப்புரை செய்தது.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை முகாமைத்துவம் செய்வதில் பாரிய பிரச்சினைகள் இருப்பது வெளியானது. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள், வர்த்தமானி அறிவித்தல் மூலம் வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு கையளிக்கப்படுவதனால், இன்றளவில் ஆணைக்குழுவுக்கு எதிராக சுமார் 600 வழக்குகள் காணப்படுவதுடன், இதற்காக ஏராளமான அரச நிதி செலவிடப்படுகின்றது. மேலும், மாற்றுக் காணிகளை வழங்கும் செயற்பாட்டின்போதும், பாரிய ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளமை பதிவாகியுள்ளது. மரணித்தவர்களின் பெயர்களைப் பயன்படுத்தியவாறு, காணிக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இத்தகையதொரு குற்றச்செயலாகும். இத்தகைய சட்டரீதியான பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு, காணப்படும் வழக்குளை விரைவில் தீர்ப்பதற்கும், எதிர்காலத்தில் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக புதிய சட்டங்களை உருவாக்குவாதற்கும் குழு விதப்புரை செய்தது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக, ஆணைக்குழுவுக்கு சொந்தமாகக் காணப்படும் காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை எனவும், காணிகளில் சட்டவிரோத குடியிருப்பாளர்கள் உள்ளார்கள் எனவும், அவர்களை அகற்றுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குழுக் கூட்டத்தின்போது வெளியானது.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவானது உரிய நிருவாக செயன்முறையின்றி செயற்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமையும் இந்த அறிக்கையிலிருந்து தெளிவாகின்றது. இந்நிலைமையை சீர்செய்வதற்காக, நிறுவனத்தை உடனடியாக மீள்கட்டமைத்து, இதன் கூட்டாண்மைத் திட்டத்தை இற்றைப்படுத்துவதற்காக வெளிப்பாட்டுத்தன்மையுடனும். பொறுப்புடனும் நடவடிக்கை மேற்கொள்வது அத்தியவசியம் என ஆணைக்குழு வலியுறுத்தியது.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் ஐந்தாவது அறிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு பற்றிய அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்களை எளிதில் அணுகும் முகமாக அதனை சுருக்கமாக பின்வருமாறு காட்ட முடியும்.

| தொடர் இலக்கம் | தலைப்பு | பக்க இலக்கம் |
|---|---|---|
| **2025.05.08 ஆந் திகதி கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள்** | | **02 - 09** |
| **01** | கூட்டாண்மைத் திட்டம் | 02 |
| **02** | அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்குழுவினர் மற்றும் பணியாட் குழுவினரை ஆட்சேர்ப்பது தொடர்பிலான பிரச்சினைகள் | 02 - 05 |
| **03** | ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உத்தியோகத்தரொருவரை தெரிவு செய்யும் செயன்முறை | 06 - 07 |
| **04** | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து சேதனப் பசளைத் திட்டத்துக்கு நிதியைச் செலவு செய்தல் | 07 - 09 |
| **2025.07.17 ஆந் திகதி கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள்** | | **09 - 24** |
| **05** | திரு. விமலராஜ் ஆணைக்குழுவின் காணிகளை சட்டவிரோதமாக அகற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று விசாரணை<br>(2023.04.26 ஆந் திகதி இடம்பெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விதப்புரை இலக்கம் 05) | 09 - 10 |
| **06** | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமல்லாத இரத்தினபுரி ராஸ்ஸகல தோட்டத்தின் காணி உரிமைக்கு பதிலாக திருமதி.சி.கிரிஅல்லவுக்கு ஹந்தானை பிரதேசத்தில் மாற்றுக் காணிகளை வழங்குதல். | 10 - 11 |
| **07** | ஆணைக்குழுவினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிக்கு பதிலாக – ஊராகல தோட்டத்தில் 25 ஏக்கரை வழங்குதல். | 11 - 12 |
| **08** | காணி ஆவணத்துக்கு ஏற்ப குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு மற்றும் இக்காணிகளின் மொத்தப் பெறுமதி | 13 - 14 |
| **09** | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு காணிகளை வழங்குதல். | 14 |

| | | |
|---|---|---|
| **10** | காணி ஆவணத்தை தயார் செய்தல் | 15 |
| **11** | திரு.எஸ்.ஆர்.ரெங்கநாதனுக்கு காணி வழங்குதல் (மாத்தளை பேகுரூப் தோட்டம்) | 15 - 16 |
| **12** | திருமதி. மாலனி நாணாயக்காரவுக்கு காணி வழங்குதல் ( இபுல்கஸ்வாடிய, கட்டாணை) | 16 - 17 |
| **13** | "உருமய" வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிகளை வழங்குதலும் அதற்கான செலவும் | 17 |
| **14** | திரு.சாள்ஸ் நெவில் உதலாகமவுக்கு காணி வழங்குதல் ( மாத்தளை கோன்கஸ்யாய) | 17 - 18 |
| **15** | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வேறு நிறுவனங்களுக்கு கையளித்தலும் அதன் பின்னர் இக்காணிகளின் உரிமை தொர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளும் | 18 - 21 |
| **16** | மாற்றுக் காணிகளை வழங்குவம் தத்துவம் மற்றும் செயன்முறை | 21 - 22 |
| **17** | நியாகம தொழில் பயிற்சி அதிகார சபைக்கு கையளிக்கப்படவிருந்த ஒரு காணியை திரு நாணாயக்காரவுக்கு வழங்குவதற்கு வழக்கொன்றில் உடன்பாடு எட்டப்படுதல். | 22 - 23 |
| **18** | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு கணக்காய்வாளரினால் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள். | 23 - 24 |

## பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்
## அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றி குழுவின் ஐந்தாவது அறிக்கை

அனைத்து பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் அல்லது வேறு பொறுப்பு முயற்சிகள் அத்துடன் 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேலான பங்குகளை அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை வைத்திருக்கின்றதுமான கம்பனி சம்பந்தப்பட்டதாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்புடன் ஆராய்தல் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

தற்போது, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கண்காணிப்பின் கீழ் வருகின்றதும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் கீழ் ஒழங்குபடுத்தப்படுகின்றதுமான 462 அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் காணப்படுகின்றன. (மூலம் – அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்)

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் (முதல் 10 மாதங்களில்) கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

| தொடர் இலக்கம் | அழைக்கப்பட்ட நிறுவனங்கள் | குழு நடத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| 1. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 18.02.2025 |
| 2. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 20.02.2025 |
| 3. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 27.02.2025 |
| 4. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 05.03.2025 |
| 5. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை | 12.03.2025 |
| 6. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 27.03.2025 |
| 7. | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (தனியார்) நிறுவனம் | 02.04.2025 |
| 8. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 08.05.2025 |
| 9. | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (தனியார்) நிறுவனம் | 09.05.2025 |
| 10. | ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை | 15.05.2025 |

| | | |
|---|---|---|
| 11. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 23.05.2025 |
| 12. | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 04.06.2025 |
| 13. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 20.06.2025 |
| 14. | மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 09.07.2025 |
| 15. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 17.07.2025 |
| 16. | அரச மரக் கூட்டுத்தாபனம் | 23.07.2025 |
| 17. | சிவில் விமான சேவைகள் அதிகாரசபை | 20.08.2025 |
| 18. | இலங்கை துறைமுக அதிகாரசபை | 10.09.2025 |
| 19. | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் | 12.09.2025 |
| 20. | இலங்கை மின்சார சபை | 24.09.2025 |
| 21. | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 08.10.2025 |
| 22. | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச | 10.10.2025 |
| 23. | எல்.ரீ.எல்.ஹோல்டிங்ஸ் கம்பனி மற்றும் அதனால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் | 24.10.2025 |

அவற்றில் **2025.05.08 மற்றும் 2025.07.17** ஆகிய இரு தினங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் அவ்வாணைக்குழுவின் தற்போதைய செயலாற்றுகையை விசாரணை செய்து வெளியிடப்பட்ட குழுவின் அவதானிப்புகளும் விதப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## <u>நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்</u>

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் 2022, 2023, மற்றும் 2024 ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் கீழே தரப்பட்டுள்ளது.

**<u>கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகைகள்</u>**

| **நிறுவனம்** | **கணக்காய்வு அபிப்பிராயம்** | | |
|---|---|---|---|
| | **2022** | **2023** | **2024** |
| காணி சீர்த்திருத்த ஆணைக்குழு | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

01 <u>முனைப்பழிவற்ற அபிப்பிராயத்தின் வகைகள்</u> (Unqualified Opinion)

நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமாக முன்வைக்கப்பட்டுள்ளது என

02 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u> (Qualified Opinion)

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்ககளைத் தவிர, நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என.

03 <u>அபிப்பிராயம் மறுப்பு</u> (Disclaimer of Opinion)

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை இணங்காண முடியாத காரணத்தினால் கணக்குகள் குறித்து ஒரு கருத்தை வெளிப்படுத்த முடியவில்லை என.

<u>04.பாதகமான அபிப்பிராயம்</u> (Adverse Opinion)

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டுநியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என.

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

***(கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் அமைச்சு)***

**விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி - 2025.05.08 மற்றும் 2025.07.17**

### 2025.05.08 ஆம் திகதி கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

### 01. இணைந்த திட்டம்

2026-2030 ஆண்டுகளுக்கான புதிய, சுயமாக உருவாக்கப்பட்ட, இணைந்த திட்டத்தை காணி சீர்திருத்த ஆணைக்குழு தயாரிக்க வேண்டும் என குழு அவதானித்தது.

**குழுவின் விதப்புரைகள்**

I. தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கை மாற்றங்களுக்கு ஏற்ப, நிறுவனத்தின் அதிகாரிகள் நிறுவனத்திற்கு மிகவும் பொருத்தமான, புதுப்பிக்கப்பட்ட மற்றும் இணைந்த திட்டத்தைத் தயாரித்தல்.

### 02. அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள்

ஆணைக்குழுவில் 2025 சனவரி 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணியாளர் அமைப்பு விவரங்கள் பின்வருமாறு:

| பணியாளர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எணணிக்கை | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேட்ட முகாமைத்துவம் | 5 | 5 | - |
| மத்திய முகாமைத்துவம் | 33 | 31 | 2 |
| தொழில்நுட்ப | 6 | 3 | 3 |
| கனிஷ்ட முகாமைத்துவம்<br>தனியார் மயப்படுத்தப்பட்ட பதவிகள் | 4<br>28 | 3<br>20 | 1 |
| முகாமைத்துவ உதவியாளர்<br>தனியார் மயப்படுத்தப்பட்ட பதவிகள் | 215<br>40 | 135<br>40 | 80 |
| ஆரம்ப நிலை | 61 | 37 | 24 |
| **மொத்தம்** | **392** | **274** | **110** |

ஆணைக்குழுவின் உண்மையான பணியாளர்கள் தொடர்பாக பின்வரும் பிரச்சினைகள் இருப்பதை குழு அவதானித்தது.

| பிரச்சினை | குழுவின் அவதானிப்பு |
|---|---|
| **2018 யூன் 27ஆம் திகதிய அப/18/1126/829/002 இலக்க அமைச்சரவை அங்கீகாரம்.** | 2018 ஆம் ஆண்டில் 214 உத்தியோகத்தர்களை ஒரு வருடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அவர்களின் செயலாற்றுகையின் அடிப்படையில் 03 வருடங்கள் வரை சேவை நீடிப்பு வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |
| **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சிய ஆட்சேர்ப்பு மற்றும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படல் .** | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட மேலதிகமாக 12 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 8 அலுவலக உதவியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படல். 3 வருடங்கள் பூர்த்தியான பின்னர் **முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி** 138 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படல். |
| **அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படல் .** | **முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி** 34 முகாமைத்துவ உதவியாளர்களும் 4 ஆரம்பநிலை பதவிகளும் (ஒப்பந்த அடிப்படையில்) சேர்க்கப்பட்டிருத்தல். |

'பத்து இலட்சம் உறுதிகளை வழங்கும் திட்டத்தை' துரிமாக செயற்படுத்தும் நோக்குடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட குறித்த உத்தியோகத்தர்களுக்கு (வருடத்திற்கு 20,000 உறுதிகளை வழங்கும் இலக்கு) களக் கண்காணிப்பு மற்றும் வரைவு தொடர்பில் பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அந்த இலக்குகளை அடையத் தவறியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஊழியர் பற்றாக்குறையை சுட்டிக்காட்டி அமைச்சரவை நிருபமொன்றின் மூலம் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்மொழியப்பட்டபோதிலும், பின்னர் அங்கீகாரம் பெறும் நோக்குடன் அரச சேவையில் நியமனங்களை வழங்குதல் சட்டத்துக்கு முரணான செயல் என்பதை குழு அவதானித்தது. அரசியல் நோக்கத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு செய்யப்படுவதால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிரந்தர நியமனங்களை வழங்க முடியாத நிலையில் நிறுவனங்களும் ஊழியர்களும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் செயலாற்றுகையை மதிப்பிடும் முறையியல் இன்றி நிரந்தர பதவியில் அமர்த்தப்படல், சரியான முறையியல்கள் மற்றும் சட்டபூர்வ சிபாரிசுகள்

பின்பற்றப்படாத நிலை, நிறுவனம் சார்ந்த பல பிரச்சினைகளுக்கு மூல காரணங்களாக அமைந்துள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றை நியமித்து உரிய தகைமைகளைக் கொண்டவர்களிலிருந்து மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

<u>**குழுவின் சிபாரிசுகள்**</u>

I. இவ்வமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பான முழு செயல்முறையும், பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக ஒரு குறிப்பிட்ட விசாரணையை, பிரச்சினைகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் ஆட்சேர்ப்பு செய்வதிலுள்ள சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல்.

- மேற்கூறிய ஆட்சேர்ப்புகளுக்கு முகாமைமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து குறித்த அங்கீகாரத்தைப் பெறாமை மற்றும் ஒப்புதல் அங்கீகாரத்திற்குட்பட்டு ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் ஆட்சேர்ப்பின் போது நிறுவன உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தவறுகள்,

- ஆட்சேர்ப்பு எவ்வாறு விளம்பரப்படுத்தப்பட்டது, பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் பற்றிய தகவல்கள், நியமனங்கள் வழங்கப்பட்ட முறை, நியமிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள்,

- ஆட்சேர்ப்பு இலக்குகள் அடையப்படவில்லை என்றால், அதற்கான காரணங்கள்,

- அனுமதிக்கு அப்பாற்பட்ட ஆட்சேர்ப்புக்கான காரணங்கள்,

- குறித்த ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு அங்கீகாரமளித்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பொறுப்புக் கூற வேண்டிய சகல அலுவலர்கள் பற்றியதுமான தகவல்கள் மற்றும் குறித்த ஒவ்வொரு கட்டத்திலும் அனுமதி வழங்கிய அலுவலர்கள் பற்றிய தகவல்கள்,

- மேற்கண்ட ஆட்சேர்ப்புகளுடன் தொடர்புடைய கடமைகளுக்கு மாறாக, இந்த ஊழியர்கள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவில் நிரந்தர பதவிகளை வகிக்கும் அதிகாரிகளின் பணிகளைச் செய்துள்ளார்களா? அப்படியானால், அதற்கான உத்தரவுகளை வழங்கிய அதிகாரிகள் குறித்து,

- இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள், பணிகள் நிறைவேற்றப்படாமைக்கான காரணங்கள் மற்றும் அமைச்சரவை நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 03 ஆம் அட்டவணையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்பதைப் பரிசீலித்தல்,

- இந்த ஊழியர்கள் தற்போது ஆற்றும் சேவைகளும் அவர்களை விளைதிறனாகப் பயன்படுத்துவதற்கான திட்டத்தையும் முன்வைத்தல்,

- தேவையான செயலாற்றுகையை அடையாமல் இவ்வூழியர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டது எவ்வாறு என்பது குறித்து,

- இவ்வாறு அங்கீகாரமின்றி நியமனம் பெற்று இதுவரை நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, நிரந்தரமாக்கப்படாதவர்களின் எண்ணிக்கை, தொடர்ந்தும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் காணப்படும் வெற்றிடங்களுக்கான தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் நிரந்தரமாக்கக் கூடிய எண்ணிக்கை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு உள்வாங்கக் கூடிய மற்றும் உள்வாங்க முடியாத பதவிகளிண் எண்ணிக்கை,

- அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை குழுவிற்கு நியமிக்கும் போது, ஆட்சேர்ப்பு நடைமுறைகள் (SoR) பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து, மீண்டும் சிக்கல் நிறைந்த சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுத்தல்.

## 03. <u>ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஒரு உத்தியோகத்தரைத் தெரிவு செய்யும் முறை</u>

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அதிகாரி ஒருவரை நியமிப்பதில் சட்ட ரீதியான நடைமுறைகள் மீறப்பட்டுள்ளதாக குழுவில் அவதானிக்கப்பட்டது. 2023 ஜூலை 11 ஆம் திகதி முதலில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதுடன் அதிக புள்ளிகளைப் பெற்ற பதில் பணிப்பாளர் நாயகம், பின்னர் 2024.05.09 அன்று அப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இருப்பினும், 2023 நேர்முகப்பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்படாததாலும், 6 மாதங்கள் கடந்ததாலும், புதிய நேர் முகப்பரீட்சையை நடத்தி பணிப்பாளர் நாயகம் ஒருவரை தெரிவு செய்யுமாறு அமைச்சின் செயலாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது. அதனடிப்படையில் **2024 ஏப்ரல் 08 ஆம் திகதி புதிய அறிவித்தல் வெளியிடப்பட்டவுடனேயே முன்னைய நேர்முகப் பரீட்சை** இரத்தாகும் சட்ட நடைமுறைகள் இருக்கும் நிலையில், ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டு பழைய நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2024 ஏப்ரல் 8, அன்று நேர்முகப்பரீட்சை நடத்தப்படாததுடன், அது குறித்து விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. சுயநிதி நிறுவனங்கள் கூட அமைச்சக செயலாளரின் தலைமை கணக்கியல் அதிகாரியின் முடிவுக்கு மாறாக செயல்பட முடியாது என்பதை வலியுறுத்தி, குழு இந்த நியமனத்தை **செல்லுபடியற்ற நியமனமாகவும்**, அந்த அதிகாரிக்கு அந்தப் பதவியின் கடமைகளைச் செய்ய **அதிகாரம் இல்லை** எனவும் சுட்டிக்காட்டியது. முறையான நடைமுறைகள், சுற்றறிக்கை விதிகள் மற்றும் பிரதம கணக்கீட்டு அதிகாரியின் கட்டளைகளை புறக்கணித்தல் குறித்து குழு தனது **கடும் அதிருப்தியை** வெளிப்படுத்தியது.

<u>குழுவின் சிபாரிசுகள்</u>

I. **2023.07.31 அன்று நடைபெற்ற நேர்முகப்பரீட்சை 06 மாதங்கள் கடந்து விட்டமையினால், மீண்டும் நேர்முகப்பரீட்சையை நடத்தி தொடர்புடைய ஆட்சேர்ப்புகளைச் செய்ய எழுத்துபூர்வ உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் 08.04.2024 அன்று கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சையை நடத்தாமல், முதற்கட்ட நேர்**

**முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பிற விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித அறிவித்தலும் விடுக்கத் தவறியமை குறித்து முறையான விசாரணை நடத்துதல்.**

II. **ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்பு சரியான வழிமுறையின்படி துரிதமாக மேற்கொள்ளல்.**

## 04. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதியிலிருந்து சேதனப் பசளைத் திட்டத்திற்கு பணம் செலவிடுதல்.

முன்னாள் காணி அமைச்சரால் 2021.05.25 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில், 'காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அனுசரனையுடன் வடமத்திய மாகாணத்தில் பிரதேச செயலக மட்டத்தில் **சேதனப் பசளை_உற்பத்திக்கான ஒரு முன்னோடிக் கருத்திட்டம்** ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. மேற்படி கருத்திட்டம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 22 (1) (ஈ) மற்றும் பிரிவு 54 இன் விதிகளின் கீழ் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் நிதியைப் பயன்படுத்தி, ஒரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்து மாதத்திற்கு 300 மெட்ரிக் தொன் பசளையை உற்பத்தி செய்வதன் மூலம் மாதத்திற்கு ரூ.9 மில்லியன் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இது தொடர்பாக, குழு பின்வரும் விடயங்களைக் கவனித்தது.

| விடயம் | விபரம் |
|---|---|
| **கருத்திட்டத்தின் நிலை** | 350 மில்லியன் ரூபா கருத்திட்டம் தொடர்பில் 302 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தபோதிலும் **22மில்லியன் ரூபா** மட்டுமே வருமானமாக திரட்டப்பட்டிருந்தது. கருத்திட்டம் தோல்வி கண்டதால் அதனை அரச உரக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டுமாறு உத்தரவிடப்பட்டிருந்தபோதிலும் அச் சொத்துக்கள் இதுவரை சாட்டப்படவில்லை. |
| **சட்டபூர்வநிலை** | கருத்திட்டம் தொடர்பில் ஆணைக்குழுவின் நிதியை பயன்படுத்துவதற்கு **சட்டபூர்வ அதிகாரம் இல்லை என** காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் சட்ட அதிகாரி அவதானிப்புகளை முன்வைத்துள்ளார். |

| | |
|---|---|
| **விசாரணைகள்** | கருத்திட்டம் தோல்வி கண்டதற்கான காரணங்கள் மற்றும் நிதிப் பயன்பாடு பற்றிய சுயாதீன பூரண விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, 2023.03.28 ஆம் திகதிய 23/383/615/017 இலக்க அமைச்சரவை தீர்மானத்தினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளரினால் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **ஆட்சேர்ப்புகள்** | முன்னய காணி அமைச்சரின் எழுத்துபூர்வ அறிவித்தலின் பிரகாரம் 27 கருத்திட்ட அதிகாரிகளும் 8 முகாமையாளர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். |
| **சொத்துக்களை அகற்றுதல்** | வட மத்திய மாகாணத்தில் இந்த கருத்திட்டத்தின் கீழ் 5 இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட 5 கட்டடங்கள் பயனற்ற நிலையில் இருப்பதுடன் அவை பிரதேச செயலாளருக்கு சொந்தமான காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அங்கு இயந்திரசாதனங்கள் முப்படை உட்பட்ட சில நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. |
| **உற்பத்தி நிலை** | உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் உரத்தில் (3100 MT) நைதரசன் சேர்க்கையின் அளவு தரத்தைவிட குறைவாக இருந்ததால் அவற்றை **இலவசமாக அகற்றுவதற்கு** சிபாரிசு செய்யப்பட்டிருந்தது |
| **சாத்தியவள ஆய்வு** | கருத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்னர் எவ்வித **சாத்தியவள ஆய்வுகளும் நடத்தப்பட்டிருக்கவில்லை**. |

**<u>குழுவின் சிபாரிசுகள்</u>**

I. இம் முழுத் திட்டம் குறித்தும் அமைச்சினால் தற்போது நடத்தப்பட்டு வரும் விசாரணையை துரிதமாக முடிவுறுத்தல்.

II. குறித்த சேதன பசளை திட்டத்தின் கீழ் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 35 நிலையங்களின் முகவரிகள், திட்டத்தில் ஈடுபட்டுள்ள முதலீட்டாளர்கள் பற்றிய தகவல்கள், பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் பற்றிய தகவல்கள் மற்றும் அவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விபரங்கள் மற்றும் முறை, இம் நிலையங்களுக்கு ஏற்பட்ட செலவு, கட்டப்பட்ட கட்டிடங்கள், அந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்ட நிலங்களின் உரிமை பற்றிய தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட உபகரணங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்த முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

III. மேற்படி விசாரணை அறிக்கையை சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்புதல்.

2025.07.17 <u>அன்று கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>

## 05. <u>ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை சட்டவிரோதமாக விடுவித்தல் தொடர்பாக மாவட்ட பணிப்பாளர் திரு. என். விமலராஜ் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படல்</u>

காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் மாவட்ட செயலாளர் என் விமலராஜ் **1,000 க்கு மேலான காணிகளை சட்டவிரோதமான முறையில் விடுவித்தல்** தொடர்பில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணையை நடத்துமாறு 2023.04.26 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் சிபாரிசு பரிந்துரைக்கப்பட்ருந்த போதிலும் அது இதுவரை செயல்படுத்தப்படவில்லை. ஒரு காணி இருமுறை நிலஅளவை செய்யப்பட்ட குற்றத்துக்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணை அறிக்கையின் அறிக்கையின் பிரகாரம் 2023.02.27 ஆம் திகதி அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் அதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த ரிட் மனுவின்(CA(W) 147/2023) ) எழுத்தாணை மனு தொடர்பான உத்தரவின் பிரகாரம் **2023.06.14 ம் திகதி அவர் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்**. மேன்முறையீட்டு நீதிமன்றம் தடைக்கட்டளை **(stay order)** ஒன்றைப் பிறப்பித்துள்ளதால் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிகாரி தொடர்பாக நடத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணை முறையான மற்றும் சவாலுக்குட்படுத்தப்பட முடியாத முறையில் நடத்தப்படவில்லை என்றும், நிறுவனம் பொறுப்பற்ற

முறையில் நடந்து கொண்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது. மேற்கண்ட வழக்கில் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தடைக்கட்டளை, இவ் அதிகாரி 1,000 நிலங்களை சட்டவிரோதமாக விடுவித்தல் தொடர்பாக அவருக்கு எதிராக **முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்கு தடையாக இருக்குமா என்பது குறித்து சட்ட ஆய்வு நடத்தி நீதிமன்றத்திற்கு உண்மைகளை விடயங்களை அறிக்கைப்படுத்த ஆணைக்குழு தவறிவிட்டதாக** குழு அவதானித்தது.

1000 காணிகளை சட்டவிரோதமாக விடுவித்தல் தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்(SPP) தலைமையில் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், குறித்த அறிக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) அனுப்பப்பட்ட பின்னர், குறித்த திணைக்களம் விசாரணையைத் தொடங்கியுள்ளது எனவும் தெரியவந்துள்ளது. இருப்பினும், ஆணைக்குழுவின் அதிகாரிகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தைத் தவறாக வழிநடத்தும் வகையிலான பதிலை அறிக்கைப்படுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மொத்தமாக, இந்த சம்பவத்தில் ஆணைக்குழு அதிகாரிகள் பொறுப்பின்றி நடந்து கொண்டுள்ளமை குறித்து குழு தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

**<u>குழுவின் சிபாரிசுகள்</u>**

I. ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ஆயிரத்துக்கு மேற்பட்ட காணிகளை ஆணைக்குழுவின் மாவட்ட பணிப்பாளர் திரு.என் விமலராஜ் சட்டவிரோதமான முறையில் வழங்கியமை தொடர்பில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணையை நடத்துமாறு 2023.04.26 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில், வழங்கப்பட்ட சிபாரிசுகளை செயற்படுத்தல்.

II. மேற்குறித்த சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கு முன்னர் , திரு.என்.விமலராஜ் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த எழுத்தாணை மனு தொடர்பில் அந் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்டிருந்த தடைக் கட்டளை **(Stay Order)** அதற்குத் அமையுமா என்பது பற்றி ஆராய்தல்.

## 06. <u>காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமற்ற ராஸ்ஸகல காணியின் உரித்திற்குப் பதிலாக திருமதி. சீ. கிரிஎல்லவுக்கு ஹந்தான பிரதேசத்தில் மாற்றுக் காணி வழங்குதல்.</u>

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ராஸ்ஸகல தோட்டத்தின் சுமார் 22 ஏக்கர் பரப்பளவுடைய காணி திருமதி கிரிஎல்ல என்பவருக்கு உரித்துடையதாக இருந்ததாகவும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமற்ற குறித்த காணிக்குப் பதிலாக அவருக்கு ஹந்தானை பிரதேசத்தில்

மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டிருந்தன எனவும் அவை அவரால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. 2023.04.28 ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளரின் தலைமையிலும், ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பங்குபற்றுதலுடனும் இந்த பிரச்சினைக்கு தீர்வளிக்கக்கூடிய நடபடிமுறைகள் பற்றிய அறிக்கையை 2 வாரங்களுக்குள் முன்வைப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

அமைச்சின் செயலாளர் முன்வைத்த அறிக்கைக்கு அமைய, திருமதி சீ. கிரிஎல்லவுக்கு ஹந்தானை தோட்டத்திலிருந்து மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் அச் சாட்டுதல் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் 2006.10.27 திகதிய கடிதம் மூலம் ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான ஹந்தானை தோட்டத்திலிருந்து 43 ஏக்கர் 01 ரூட் 26 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்ட காணி திருமதி கிரிஎல்ல மற்றும் திருமதி.பீ.எஸ்.எம். ஜயவர்தன ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதை குழு அவதானித்தது.

மேலே குறிப்பிட்ட 22 ஏக்கர் காணிப்பகுதி ஆணைக்குழுவுக்கு உரித்துடையதல்ல எனினும், ஆணைக்குழு தலையிட்டு அதனை பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனிக்கு பெற்றுக் கொடுத்தமை பிரச்சினைக்குரியதாகும்.

திருமதி சீ.கிரிஎல்ல 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணி பிரகடனப்படுத்தப்பட்டவரல்ல என்பதால், அவருக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் காணி வழங்க வேண்டிய எவ்விதமான சட்ட ரீதியான கடப்பாடும் இல்லை என்றும், ராஸ்ஸகல தோட்டத்தின் இம்முழுமையான காணிப்பகுதி காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும், அது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக காணப்பட்டது என்றும், இறுதியாக ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையினாலேயே திருமதி. சீ.கிரிஎல்லவுக்கு ஹந்தான தோட்டத்தில் மாற்றுக் காணி பெற்றுக் கொடுக்கப்பட்டது என்றும் தெரிய வந்தது.

இந்த சகல விடயங்களையும் விசாரணை செய்ததன் பின்னர், திருமதி. சீ.கிரிஎல்லவுக்கு ராஸ்ஸகல தோட்டத்தில் காணப்படும் 22 ஏக்கர் காணியின் உரித்து தொடர்பில், **“காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலையீடின்றி”** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கடிதம் ஒன்றின் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தான தோட்டத்திலிருந்து 43 ஏக்கர் பாரியளவிலான காணியை கையுதிர்ப்புச் செய்துள்ளமை பிரச்சினைக்குரியது என குழு வலியுறுத்தியது.

## 07. ஆணைக்குழு சுவீகரித்த காணிக்கு பதிலாக ஹந்தான – ஊராகல தோட்டத்திலிருந்து 25 ஏக்கரைப் பெற்றுக் கொடுத்தமை

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணியொன்றுக்கு மாற்றுக் காணியாக கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த நபரொருவருக்கு ஹந்தான – ஊராகல தோட்டத்திலிருந்து 25 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருப்பதாகவும், குறித்த நபர் காணியை அற்றோனித் தத்துவம் ஒன்றின் மூலம் வேறு ஒருவருக்கு சாட்டியுள்ளதாகவும், இறுதியில் அது ஹோம் லேண்ட்ஸ் எனும் காணிகளை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் குழு அவதானித்தது.

2021.07.31 ஆம் திகதி காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் இந்த 25 ஏக்கர் காணியை ரூ. 101,109 க்கு (ஒரு பேர்ச் 28.72 வீதம்) நிறுவனத்திற்கு உறுதியொன்றின் மூலம் வழங்கப்பட்டிருந்ததைக் குழு அவதானித்தது. அந்நிறுவனம் தற்போது தொடர்புடைய காணியை ஒரு பேர்ச்சஸ் 6 லட்சம் வீதம் விற்பனை செய்து 2.2 பில்லியன் ரூபா வருமானமாக ஈட்டுவதாகவும், காணியின் ஆரம்ப உரிமையாளருக்கு எவ்வித நலனும் கிடைக்கவில்லை என்றும், இது முழுமையாகவே தவறானதொரு கொடுக்கல் வாங்கல் என்றும் குழு சுட்டிக் காட்டியது.

இந்தக் கொடுக்கல் வாங்கலை இரத்துச் செய்யுமாறு சனாதிபதியின் செயலாளர் அறிவித்திருந்த போதிலும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மாற்றுக் காணிகளை சாட்டுதல் செய்வதற்கு முன்னர் தொடர்புடைய காணியின் உரிமை தொடர்பில் முறையாக உறுதிப்படுத்திக் கொள்ளப்படாமை இங்குள்ள பிரதான பிரச்சினையென்பதைக் குழு அவதானித்துள்ளது.

அவ்வாறே, இந்தக் காணியை ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சாட்டுததல் செய்யப்பட்டிருக்கும் நிலையில் கூட காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் காணியுறுதி வழங்கப்பட்டுள்ளது. அச்சபை எதிர்ப்பினை வெளியிட்ட பின்னர் ஆணைக்குழு காணியுறுதியை இரத்துச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும், அறுதியுறுதியொன்றை இரத்துச் செய்ய வேண்டுமானால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் மாத்திரமே செய்ய முடியும் என முன்னாள் தவிசாளர் குறிப்பிட்டார். எனினும், இது தொடர்பில் எவ்வித வழக்கையும் தாக்கல் செய்வதற்கு ஆணைக்குழு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குழு அவதானித்தது.

இவ்வனைத்து விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடிய குழு, காணிகளின் ஆட்சி தொடர்பிலுள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளாமல் காணிகளை நபர்களுக்குச் சாட்டுதல் செய்வதன் மூலம் மாற்றுக் காணிகளுக்கு உரிமை கோருவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி இருப்பதாகவும், அறுதி உறுதியொன்றை இரத்துச் செய்ய முடியாது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டே அது தொடர்பில் ஆணைக்குழு அனுமதியை

வழங்கியுள்ளதாகவும், அதற்கு அப்பாலும் அந்தத் தவறை திருத்திக் கொள்வதற்கு ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் பொறுப்பின்றி நடந்து கொண்டுள்ளதாகவும் வலியுறுத்தியது.

<u>குழுவின் பரிந்துரைகள்</u>

I. இந்த முறைகேடான சாட்டுதல் தொடர்பில் முறையான விசாரணையை நடாத்தி, பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

**08. <u>காணிப் பதிவேட்டின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகளின் அளவு மற்றும் காணிகளின் பெறுமதி</u>**

காணிப் பதிவேட்டிற்கமைய ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மொத்தக் காணிகளின் அளவு 156,838 ஹெக்டயார்களாகும். எனினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிதியறிக்கைகளில் 2,144 ஹெக்டயார்கள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு, அதன் பெறுமதி ரூ. 905,285,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கும் மொத்தக் காணியில் 1.37% ஆகும். இதன் மூலம் ஆணைக்குழு குத்தகைக்கு வழங்கியிருந்த மொத்தக் காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை என்பதால், கணக்காய்வில் மொத்தப் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் போயுள்ளது. காணி பெற்றுக் கொள்ளுதல்கள் ஆவணம் காணப்படுகின்ற போதிலும், காணி கையுதிர்ப்புச் செய்தல் குறித்த முறையான இற்றைப்படுத்தப்பட்ட ஆவணமொன்று இல்லையென்பதையும், மேலும், மதிப்பீடு செய்வதற்காக சகல காணிகளும் அளக்கப்பட்டு வரைபடம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்கள் கூறிய விடயங்களின் அடிப்படையில், 1972-1975 காலத்தில் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் காணிகள் சுவீகரிக்கப்பட்டாலும், முறையான அளவீடுகள் அல்லது பௌதீக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாமை, பிரகடனப்படுத்துனர்கள் வழங்கிய பிரகடனங்களில் சிக்கல்கள் காணப்பட்டமை மற்றும் தொழில்நுட்ப ரீதியான சிரமங்கள் காரணமாக காணிப்பதிவேட்டை தயாரிக்கும் போது சிக்கல்கள் உருவாகின. டிஜிடல் காணிப்பதிவேடொன்றைத் தயார் செய்வதற்கு குழு பரிந்துரை செய்திருந்ததுடன், ஆணைக்குழு அதனை 04 கட்டங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

நில அளவைத் திணைக்களத்துடன் இணைந்து காணிகளை அளந்து வரைபடமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது சிக்கலான மற்றும் கால தாமதம் ஏற்படும் பணி என்பதாகவும் குழுவிற்குத் தெரிய வந்தது. காணி சுவீகரிப்புச் செய்யும் போது முறையான

அளவை அல்லது பௌதீக உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாமை நிறுவனத்தின் பிரதான பணியை கவனத்திற் கொள்ளமையாகும் என்றும், அந்தப் பணியை துரிதமாக நிறைவு செய்ய வேண்டும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணிகளை அளக்கும் பணியை துரிதமாக நிறைவு செய்தல் மற்றும் குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்தல்.

II. அந்தப் பணிக்காக குறித்த காணிகள் அமைந்துள்ள பிரதேசங்களின் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல்.

## 09. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு காணிகளை வழங்குதல்.

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டத்தின் 44 (ஓ) பிரிவின் அடிப்படையில் ஆணைக்குழுவில் தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் பணியாற்றிய 373 ஊழியர்களுக்கு ஒரு பேர்ச் ரூ.1,000/- என்ற பெறுமதியில் ஒருவருக்கு 20 பேர்ச் வீதம் 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு ஆண்டு வரை 46 ஏக்கர், 1 றூட், 5.64 பேர்ச் காணி வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

காணி சீர்திருத்த சட்டத்தின் 44 (ஓ) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவினால் பணியில் ஈடுபடுகின்ற நபர்களுக்காக சேமலாப நிதியம் ஒன்றை ஸ்தாபித்தல், நலன்புரி மற்றும் கேளிக்கை விளையாட்டு வசதிகள் மற்றும் வீடு, விடுதி மற்றும் ஏனைய இடவசதிகளை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனினும், சட்டத்தில் “ஏனைய இடவசதிகள்” என்பது காணித் துண்டுகளை வழங்குவதைக் குறிக்கவில்லை என்றும், அது உத்தியோகபூர்வ வீடமைப்புக் கருத்திட்டம், பொது வசதிகளாக அமைய வேண்டும் என்றும், அது சட்டத்தின் நோக்கங்களைத் தாண்டிச் செல்லும் விடயம் என்றும் குழு வலியுறுத்தியது.

இவ்வாறு காணிகளை வழங்குவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், முன்னர் காணி கிடைக்காத ஊழியர்கள் தற்போது காணிகளைப் பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்து வருவதாகவும் குழுவிற்கு தெரிய வந்தது.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. 1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் 44 (ஓ) பிரிவில் சொல்லப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் ஆணைக்குழு

தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் பணியாற்றிய ஊழியர்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? என்பது குறித்து சட்டமா அதிபரிடம் துரிதமாக ஆலோசனை பெறுதல்.

II. சட்டமா அதிபரிடமிருந்து கிடைக்கும் ஆலோசனையின் அடிப்படையில் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 10. <u>காணிப் பதிவேட்டைத் தயாரித்தல்.</u>

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் அடிப்படையில் 1975 ஆம் ஆண்டு வரை 1.8 மில்லியன் ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், சரியான தூர நோக்கு மற்றும் திட்டமிடல் இல்லாத நிலையில் ஆணைக்குழுவிற்கு உரிய காணிகள் தொடர்பான பதிவேடொன்றைத் தயாரிப்பதற்கு முடியாமல் போயிருந்தது. அவ்வாறு காணிப் பதிவேடொன்றைத் தயாரிப்பதற்கு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரையின் படி காணிப்பதிவேட்டைத் தயாரிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பது குழுவில் தெரிய வந்தது.

## 11. <u>திரு. எஸ். ஆர். ரெங்கநாதனுக்குக் காணி வழங்குதல். (மாத்தளை பேகுரூப் தோட்டம்)</u>

மாத்தளை பேகுரூப் தோட்டம் தொடர்பாக காணி பிரகடனப்படுத்தப்பட்டிருந்த திரு. எஸ். ரெங்கநாதனுக்கு 1975 ஆம் ஆண்டில் வர்த்தமானியின் மூலம் 50 ஏக்கர்களுக்கு நியதிச்சட்ட உறுதியாக உரிமை வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்தக் காணி வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறி அவருக்கு மாற்றுக் காணி கோரப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 1982 ஆம் ஆண்டில் வர்த்தமானியின் மூலம் 25 ஏக்கர் 19 பேர்ச், 6 ஏக்கர் மற்றும் 18 ஏக்கர் என்பதாக மூன்று காணித் துண்டுகள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததன் பேரில், 1987 ஆம் ஆண்டு பரிமாற்றல் உறுதியொன்றின் மூலம் 32 ஏக்கர் 02 றூட், 30 பேர்ச் காணி அவருக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ரூ. 17,000 ஆக இருந்த மதிப்பீட்டு வேறுபாட்டையும் அறவிடாமல் காணியை வழங்குவதற்கு ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. இந்த 50 ஏக்கர் காணி நக்கில்ஸ் வன ஒதுக்கத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து திரு. ரெங்கநாதன், மீண்டும் மாற்றுக் காணியொன்றைக் கோரியிருந்தார். அதற்குரியதாக கடுவலை பிரதேசத்திலுள்ள கனேமுல்ல கும்புர எனும் காணியிலிருந்து 25 ஏக்கர் காணியை

பரிமாற்றல் உறுதி ஒன்றின் மூலம் வழங்குவதற்கு அங்கீகரித்து அதில் 11 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. அந்தக் காணியின் பெறுமதி ரூபா 350 கோடி என குழுவில் தெரிய வந்தது.

இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பல பிரச்சினைகள் மேலெழுந்தன. அதாவது திரு. ரெங்கநாதனுக்கு 1987 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 32 ஏக்கர் காணிப்பகுதி அவரால் 1997 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழு அவருக்கு மீண்டும் மீண்டும் அரசின் பெறுமதி வாய்ந்த காணிகளை வழங்கியுள்ளது. அவ்வாறே, குறித்த காணி சுவீகரிக்கப்படவில்லை என லக்கல பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார். அவ்வாறாயினும் லக்கல போன்ற கஷ்டப் பிரதேசங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட காணிகளுக்காக கொழும்பு போன்ற சன நெருக்கடி மிக்க, அதிக விலை கொண்ட பிரதேசங்களில் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், உரிய பரிமாற்றல் உறுதியில் பிரயோகிக்கப்பட்டிருந்த கையொப்பம் கூட திரு. ரெங்கநாதனின் பழைய கையொப்பத்துடன் பொருந்தவில்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, திரு. ரெங்கநாதனுக்கு வழங்கப்பட்டிருந்த 32 ஏக்கர் காணிப்பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், மாற்றீடாக பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்த 25 ஏக்கர் அளவு காணியை 18 ஏக்கர்களாக மட்டுப்படுத்தி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் போது உத்தியோகத்தர்கள் கவனயீனமாகவும் பொறுப்பின்றியும் நடந்து கொண்டுள்ளமையை குழு அவதானித்தது. இது அரச சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பயங்கரமான குற்றமாகும் என்பதுடன், இவ்வாறான செயற்பாடுகள் இனிமேல் நடைபெறக் கூடாது என்றும் குழு வலியுறுத்தியுள்ளது.

<u>குழுவின் விதப்புரை</u>

I. இது தொடர்பில் முறையான விசாரணையொன்றை நடாத்தி, பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு, அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டரீதியான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

## 12. <u>திருமதி மாலினீ நாணயக்காரவுக்கு காணி வழங்குதல். (இம்புல்கஸ்வாடிய, கட்டான)</u>

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கம்பஹா மாவட்டத்தில் உள்ள 28.52 ஹெக்டயார் பரப்பளவுடைய இம்புல்கஸ்வாடிய என்ற பெறுமதி மிக்க காணி ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (ஜதோஅச) கையுதிர்க்கப்பட்டிருந்தது. ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையினால் 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 53 ஆண்டுகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் இந்தக் காணி சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு கையுதிர்க்கப்பட்டிருந்தது. இந்தக் காணியிலிருந்து 25 ஏக்கர் காணியை, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் ஆணைக்குழு மீளச் சுவீகரித்துக்கொண்டது. **அது காணி பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவரின் இரு பேரர்களுக்கு** மாற்றுக் காணிகளை சாட்டுதல் செய்தலின் கீழ் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பேரப்பிள்ளைகளுக்கு காணிகளை வழங்குவதற்கு ஆணைக்குழுச் சட்டத்தில் எந்தவொரு ஏற்பாடும் காணப்படவில்லை என்பதுடன், ஆணைக்குழு கட்டான இம்புல்கஸ்வாடிய காணியிலிருந்து 28.5 ஏக்கர் அளவினை பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. இந்த சாட்டுதல் தொடர்பில் சனாதிபதியின் செயலாளர் மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் விட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது. தனிப்பட்ட நபர்களுக்கு காணி சாட்டுதல்களுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டாம் என நிதியமைச்சின் செயலாளர் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் என்பன எழுத்து மூலமாக அறிவித்திருந்த போதிலும், அதிவிசேட வர்த்தமானி ஒன்றின் மூலம் இந்தக்காணி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களில், தூரப் பிரதேசங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட பிரிக்கப்படாத காணிகளுக்குப் பதிலாக, விலை கூடிய, சனநெருக்கடி மிக்க பிரதேசங்களில் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி காணி அமைச்சின் செயலாளர் குறித்த வர்த்தமானியை இரத்துச் செய்யும் படி உத்தரவிட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. இந்தக் காணிகள் தற்போது துண்டாடப்பட்டு மிக உயர்ந்த விலைகளில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருப்பதும் தெரிய வந்தது.

இவ்வாறாக மிகப் பெறுமதி மிக்க அரச காணிகள் அரசியல் அழுத்தங்கள் காரணமாக எவ்வித சட்டரீதியான அடிப்படைகளும் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளமையானது பாரதூரமான குற்றமாகும் என குழு வலியுறுத்தியது.

## 13. <u>“உருமய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உறுதிகளை வழங்குதல் மற்றும் அதற்கான செலவுகள்</u>

அரசின் உருமய காணி உறுதி வழங்கும் வைபவத்துடன் இணைந்ததாக “சகலருக்கும் காணி உரிமை” என்ற தொனிப் பொருளில் காணியுறுதி வழங்கும் வைபவம் 2024 மார்ச் மாதம் 30 ஆம் திகதி கண்டி போகம்பறை மைதானத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் உறுதி பெற்றவர்கள் 2,700 பேருக்கு உறுதிகளை வழங்குவதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ரூ. 10,106,150 செலவு செய்யப்பட்டுள்ளதாக குழு அவதானித்தது.

## 14. <u>திரு. சார்ள்ஸ் நெவில் உதலாகமவிற்கு காணி வழங்குதல். (மாத்தளை கோன்கஸ்யாய)</u>

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் அடிப்படையில் சார்ள்ஸ் நெவில் உதலாகம என்ற நபரினால் 64 ஏக்கர் 0 றூட் 01 பேர்ச் பிரகடனம் செய்யப்பட்டிருந்ததுடன், அவருக்கு நியதிச் சட்ட உறுதியின் கீழ் 1988 ஆம் ஆண்டு யூன் 21 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாத்தளை மாவட்டத்தில்

இரண்டு இடங்களில் 50 ஏக்கர் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தக் காணிகளில் சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் இருப்பதாகக் கூறி, அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றுக் காணியைக் கோரியிருந்தார். அவரால் 2010 யூன் மாதம் 22 ஆம் திகதி அற்றோனித் தத்துவம் ஒன்றின் மூலம் பறிமாற்றிக் கொள்ளும் செயற்பாடுகளுக்காக ஜயம்பதி பராக்கிரம அளுவிஹாரே என்பவரை தன்னுடைய அற்றோனி தத்துவக்காரராக நியமித்திருந்தார். வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்த கோன்கஸ்யாய என்ற காணியின் ஒரு பகுதிக்குப் பகரமான மாற்றுக் காணியாக அற்றோனித் தத்துவக்காரருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த உடுவெல தோட்டத்தின் 24 ஏக்கர் 02 றூட் 07 பேர்ச் அளவினை மதிப்பீட்டுப் பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாட்டை அறவீடு செய்து வழங்குவதற்கு 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டிருந்த காணி திரு. உதலாகமவினால் 2010 யூன் மாதம் 22 ஆம் திகதி அற்றோனித் தத்துவதாரருக்கு விற்பனை செய்திருப்பது குழுவினால் அவதானிக்கப்பட்டது. வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி வழங்கப்பட்டிருந்த நிலையில் அக்காணியை சுவீகரிக்காமல் அவருக்கு மீண்டும் காணியைப் பெற்றுக் கொடுக்க ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

மாற்றுக் காணியாகக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட காணிக்குப் பதிலாக மதிப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்துமாறு (உச்ச எல்லை) பிரதிப் பணிப்பாளர் விடுத்த அறிவித்தலின் அடிப்படையில், திரு. உதலாகமவினால் 2024 யூலை மாதம் 30 ஆம் திகதி கொண்ட பற்றுச் சீட்டின் மூலம் பணம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2018 மார்ச் மாதம் 23 ஆம் திகதியுடைய மரணச் சான்றிதழின் படி திரு. உதலாகம அந்தத் திகதியில் உயிருடன் இருக்கவில்லை என்று குழுவில் தெரிய வந்தது.

திரு. சார்ள்ஸ் நெவில் உதலாகம 2018 மார்ச் மாதம் 23 ஆம் திகதி மரணமடைந்திருந்த நிலையிலும், அவர் கையொப்பமிட்ட அற்றோனித் தத்துவம் 2023 மார்ச்சு மாதம் 10 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், அவர் சத்தியக் கடதாசி ஒன்றை வழங்கியுள்ளதாகவும் மேலும் அவதானிக்கப்பட்டது. 2023 திசெம்பர் 14 ஆம் திகதி அவரால் மாற்றுக் காணிக்கான கோரிக்கைக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2024 இல் ஆணைக்குழுவினால் குறித்த கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டிருப்பது பாரதூரமான பிரச்சினை என்றும் குழு வலியுறுத்தியது. இறந்த ஒரு நபரின் பெயரில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது பாரதூரமான மோசடி மற்றும் குற்றமாகும் என்றும், ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் தெரிந்தோ தெரியாமலோ இந்த மோசடியின் பங்குதாரர்களாகி இருப்பதாகவும் குழு அவதானித்தது.

பிரதி அமைச்சரின் அலுவலகத்திற்கு இது தொடர்பில் முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றதுடன், அது தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குழுவில் தெரிய வந்தது. அதன் அடிப்படையில், முதற்கட்ட விசாரணையொன்று வெளி விசாரணை அலுவலர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவில் தெரிய வந்தது.

<u>குழுவின் பரிந்துரைகள்.</u>

I. இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்தல்.

II. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஆவணங்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளுதல்.

## 15. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணிகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வேறு நிறுவனங்களுக்குச் சாட்டுதல் செய்தமையும் அதன் பின்னர் அந்தக் காணிகளின் உரிமை தொடர்பில் மேலெழுந்த பிரச்சினைகளும்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு (LRC) சுவீகரித்துக் கொள்ளப்பட்ட காணிகள், பிற்காலத்தில் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் (JEDB) மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு (SPC) நிர்வகிப்பதற்காக வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிபந்தனையுடன் பெற்றுக் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனங்களினால் அக்காணிகள் 23 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு (RPC) வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனியும் ஒன்றாகும். வர்த்தமானி அறிவித்தலில் காணி “சாட்டுதல்” (Vested) எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் போன்றே பிரதேச தோட்டக் கம்பனிகளும் குறித்த காணிகளின் முற்றுரிமை தமக்கிருப்பதாக வாதிப்பதாகவும் குழு அவதானித்தது.

எவ்வாறாயினும், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையானது1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை பரிபாலிக்கும் நோக்கில் நிறுவப்பட்டது என்பது குழுவில் தெரிய வந்தது. காணி சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் 06 ஆவது பிரிவின் கீழ் விவசாயக் காணிகள் ஆணைக்குழுவின் வசம் கொண்டு வரப்படும் சந்தர்ப்பத்தில் அந்தத் திகதியிலிருந்து அதன் முற்றுரிமை கடப்பாடுகளின்றி காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமானதுடன், 1981 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க சட்டத்தின் 27 (அ) (4) உப பிரிவின் கீழான விதிகள் முறிக்கப்படும் போது காணிகளை மீண்டும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாக்குவதற்கு விடயப் பரப்பிற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் காணப்பட்டது. இதன் மூலம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான சட்ட ரீதியான உரிமை யாப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை முகாமைசெய்வதற்காக நிபந்தனைகளுடன் சாட்டுதல் செய்யப்பட்டிருந்த போதிலும், சட்ட ரீதியான உரிமை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமானதாகக் காணப்பட்டதாகவும், எனினும் நீதிமன்றத்தினால் கூட இந்தக் காணிகளின் உரிமையை உறுதிப்படுத்த முடியாமல் போனமையினால், தெற்கு அதிவேகப் பாதைக்கு காணிகளைச்

சுவீகரிக்கும் போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குக் கிடைக்க வேண்டிய 5 பில்லியனை விட அதிகமான இழப்பீட்டு நிதி நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தது. அதற்கு மேலதிகமாக பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் இந்தக் காணிகளில் அனுமதியற்ற மாணிக்கக் கல் அகழ்வு உள்ளிட்ட பல்வேறு வணிக நடவடிக்கைகள் மற்றும் பங்குச் சந்தை முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், இந்தப் பிரச்சினையானது சில தரப்பினரிடையே காணப்படும் சிக்கலான நிலை என்பதும் மேலும் தெரிய வந்துள்ளது.

காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளின் போது பிரதேச செயலாளர்களால் காணிகளின் உரிமையை உறுதியாக கூற முடியாத சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுவதால், நீதிமன்றங்களுக்கும் தீர்ப்பு வழங்க முடியாமல் போகின்றமை காரணமாக பெருந்தொகையான வழக்குகள் ஒன்று சேர்ந்துள்ளன. அவ்வாறே, இந்தப் பிரச்சினை காரணமாக காணி சீர்திருத்த ஆணைக்குழு தனியார் சட்டத்தரணிகளுக்கு பாரிய தொகைப் பணத்தைச் செலவு செய்து சுமார் 600 வழக்குகளை நடாத்திச் செல்வதும் குழுவில் தெரிய வந்தது. துரிதமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று குழு வலியுறுத்தியது.

இந்தக் காணிகளின் முற்றுரிமை தொடர்பில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறுவனங்களிடையே கருத்து முரண்பாடான நிலை உருவாகி உள்ளமை குழுவில் தெரிய வந்தது.

| **நிறுவனம்** | **தொடர்புடைய காணி உரித்து தொடர்பான நிலைப்பாடு** |
|---|---|
| காணி சீர்திருத்த ஆணைக்குழு | ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கு முகாமை செய்வதற்காக வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிபந்தனைகளுடன் சாட்டப்பட்டுள்ளதுடன், குறித்த காணிகளின் சட்ட ரீதியான உரிமை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரியதாக வேண்டும் என. |
| ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | வர்த்தமானி அறிவித்தலில் “சாட்டுதல்” (Vested) என்ற பதத்தினைப் பிரயோகித்தமை காரணமாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கு முற்றுரிமை கிடைத்துள்ளது என. |
| 23 பெருந்தோட்டக் கம்பனிகள் | ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பன அவர்களுக்கு சாட்டியிருப்பதாலும், அவர்கள் அந்தக் காணிகளைப் பெற்றுக் கொண்டது திறைசேரியினால் என்பதாலும் அந்தப் காணிகளின் முற்றுரிமை அவர்களுக்கு கிடைக்கிறது என. |

இந்தப் பிரச்சினை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடிய குழு பின்வரும் பரிந்துரைகளை சமர்ப்பித்தது.

<u>குழுவின் பரிந்துரைகள்.</u>

I. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான வேறு நிறுவனங்களுக்குச் சாட்டியுள்ள மற்றும் அதன் பின்னர் அதன் உரிமை தொடர்பாக எழுந்துள்ள சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு தேவைப்படுமாயின் புதிய சட்ட உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தியேனும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளளுதல்.

II. இந்தப் பிரச்சினை காரணமாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை, தடை உத்தரவுகளின் எண்ணிக்கை, நீதிமன்றங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நட்டஈட்டு நிதியின் அளவு தொடர்பான தகவல்களையும், இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய முன்மொழிவுகள், பரிந்துரைகளை உள்ளீடு செய்து அமைச்சரவைக்கு நிரூபம் ஒன்றைச் சமர்ப்பித்தல்.

## 16. <u>மாற்றுக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் அதிகாரங்கள் மற்றும் செயல் ஒழுங்குகள்.</u>

| | |
|---|---|
| சட்ட ரீதியான விடயங்கள் | காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளரின் (சட்டம்) விளக்கமளிப்பின் அடிப்படையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் |
| காணி பரிமாற்றல் அதிகாரம் | 1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தின் 22(1)(அ) மற்றும் 44(அ) பிரிவுகளின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு “காணி பரிமாற்றலுக்கு” அதிகாரம் காணப்படுகிறது என |
| மாற்றுக் காணிகளை சாட்டுதல் | நியதிச் சட்ட உறுதியை மீளத் திருத்தம் செய்வதற்கு நேரடியான ஏற்பாடுகள் இல்லாத போதிலும், ஒதுக்கப்பட்ட காணிகளை ஆட்சிகொள்ள முடியாத நிலையில் ஆணைக்குழுவின் விருப்பின் அடிப்படையில் மாற்றும் ஒழுங்கு பின்பற்றப்பட்டுள்ளது என, |
| விருப்ப அதிகார வரம்பு | இந்த விருப்ப அதிகாரத்தை சட்டத்தின் நோக்கங்களுக்குப் புறம்பான காரியங்களுக்குப் பயன்படுத்த முடியாது என, |
| குடும்பத்துள் சாட்டும் வரம்பு | சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவருக்கு 50 ஏக்கர் (நியதிச் சட்ட உறுதி) பெற்றோர் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு குடும்பத்திற்குள் சாட்டுதல் செய்யக் கூடிய |

| | |
|---|---|
| சட்ட ரீதியான விடயங்கள் | காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளரின் (சட்டம்) விளக்கமளிப்பின் அடிப்படையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் |
| | காணியின் உச்ச வரம்பு 150 ஏக்கர் ஆகும் என, அதன் பின்னர் குடும்பம் ஒன்றுக்கு கிடைக்கும் உச்ச எல்லை 200 ஏக்கர் என. |
| பேரப் பிள்ளைகளுக்கு காணிகளை சாட்டுதல் | தலைமுறைகள் சில கடந்த பின்னர் பேரர்களுக்கு காணி வழங்குவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை என்று. |

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தின் 44(அ) பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு மாற்றுக் காணிகளைப் பெற்றுக் கொடுக்க அதிகாரம் உள்ளதாகவும், அதற்கு "பரிமாற்றுவதற்கு" காணப்படும் அதிகாரம் பொருந்தும் என்றும், அதற்காக ஒழுங்கான முறையியலொன்று காணப்படாமையால் ஆணைக்குழு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் தீர்மானம் மேற்கொள்வதாகவும் குழுவில் முன்வைக்கப்பட்டது.

பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவருக்கு நியதிச் சட்ட உறுதியாக ஒதுக்கப்பட்ட காணியில் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் குடியிருத்தல், வன ஒதுக்கமாக அரசினால் சுவீகரிக்கப்படல் அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தினால் குறித்த காணியின் ஆட்சியை உரிமையாளரால் பெற்றுக் கொள்ள முடியாமல் போகும் போது, நியதிச்சட்ட உறுதியை மீண்டும் மாற்றுவதற்கு அல்லது அதற்குப் பதிலாக வேறு காணி ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு சட்டத்தில் நேரடியாக ஏற்பாடுகள் இல்லாத போதிலும், நபர்களுக்கு அவ்வாறான அசாதாரணமொன்றுக்கு முகம் கொடுக்க நேரிடும் சந்தர்ப்பங்களில் பிரயோகத்தில் காணியை மாற்றுதல் பின்பற்றப்பட்டிருந்ததாக குழு அவதானித்தது. எவ்வாறாயினும், இந்தப் பிரயோகம் சில சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

I. நியதிச் சட்ட உறுதிக்காக மற்றுக் காணிகள் பெற்றுக் கொடுக்கப்படும் போது நடைபெற்றுள்ள சகல முறையற்ற நிலைமைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துதல்.

II. நியதிச் சட்ட உறுதிக்காக மாற்றுக் காணிகளை இனிமேலும் பெற்றுக் கொடுக்க வேண்டுமா? என்பது தொடர்பில் கவனம் செலுத்துதலும், தொடர்ந்தும் அவ்வாறு செய்ய வேண்டுமானால் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய முறையான செயல் ஒழுங்கொன்றை தயாரித்தல்.

**17. <u>நியாகம தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கு விற்பனை செய்து சாட்டுதல்செய்ய இணங்கியுள்ள காணியை திரு. லக்ஷ்மன் நாணயக்காரவுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு வழக்கொன்றில் இணக்கப்பாடு எட்டடப்பட்டிருத்தல்.</u>**

பெந்தோட்டை, வலல்லாவிட கோரளையின் காலி நியாகம பிரதேசத்தில் அமைந்துள்ள 13 ஏக்கர் 03 றூட் 39.7 பேர்ச் காணியை நியாகம தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு (VTA) விற்பனை செய்வதன் மூலம் சாட்டுதல் செய்வதற்கு 2010 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக அதிகார சபையினால் ரூ. 3,013,511 ஐச் செலுத்தப்பட்டுள்ளதுடன், உறுதியைப் பெற்றுக் கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவிற்கு பலமுறை கடிதங்களை சமர்ப்பித்திருந்த போதிலும், இதுவரை குறித்த காணியின் உறுதியை இதுவரை தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கிடையில், திரு. சார்ள்ஸ் நாணயக்காரவின் நியதிச் சட்ட உறுதியை, உறுதியாக அளந்து அல்லது வர்த்தமானி அறிவித்தல் மூலம் பூரணப்படுத்தி இருக்காத நிலையில், அவரின் பிள்ளையான திரு. லக்ஷமன் நாணயக்காரவிற்கு 25 ஏக்கர் காணி மாற்றுக் காணி வழங்குவதற்கு காணி சீர்திருத்த ஆணைக்குழு 2005 ஆம் ஆண்டில் தீர்மானித்திருந்தது. தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு ஒதுக்கிய 'கல்லிந்தவத்த' காணி வேண்டும் என்று திரு. லக்ஷ்மன் நாணயக்கார கோரிக்கை விடுத்திருந்ததுடன், அந்தக் காணியில் 03 ஏக்கர் அளவு அவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு காணி சீர்திருத்த ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது.

தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு காணியின் உரிமை சாட்டுதல் செய்யப்படாத குறித்த காலப்பகுதியில், திரு. லக்ஷ்மன் நாணயக்கார ஆணைக்குழுவிற்கு எதிராக எழுத்தாணை மனுவொன்றைத் (CA Writ 100/2020) தாக்கல் செய்தார். இந்த வழக்கில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுமாறு காணி அமைச்சின் செயலாளர் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதன் அடிப்படையில், தொழிற் பயிற்சி அதிகார சபையினால் உரிமை கோரிய காணியிலிருந்து 03 ஏக்கர் அளவு திரு. லக்ஷமன் நாணயக்காரவுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இரு தரப்பும் நீதிமன்றத்தில் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தது.

வழக்கு விவகாரங்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே ஆணைக்குழு செயற்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டிய குழு, அமைச்சின் செயலாளரினால் இணக்கப்பாட்டுக்கு வருமாறு ஆலோசனை வழங்கியமை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தியமை மூலம் நியாகம தொழிற் பயிற்சி அதிகார சபையின் உரிமைகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பதை அவதானித்தது.

## 18. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரியதாக முன்வைத்துள்ள காணக்காய்வு அவதானிப்புக்கள்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2002 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரியதாக முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் 2025.05.15 மற்றும் 2025.07.17 ஆகிய தினங்களில் குழுவின் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில், குழு வழங்கிய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், கலந்துரையாடலுக்கு உட்படுத்த முடியாமல் போன சகல விடயங்கள் தொடர்பிலும் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

**<u>குழுவின் பரிந்துரைகள்.</u>**

I. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரியதாக முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் 2025.05.15 மற்றும் 2025.07.17 ஆகிய தினங்களில் குழுவின் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில், குழு வழங்கிய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், கலந்துரையாடலுக்கு உட்படுத்த முடியாமல் போன சகல விடயங்கள் தொடர்பிலும் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

II. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரியதாக முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் 2025.05.15 மற்றும் 2025.07.17 ஆகிய தினங்களில் குழுவின் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில், குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் விசாரணை அறிக்கை மற்றும் மேலே 18(1) பரிந்துரையின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணை அறிக்கை அனைத்தையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.